# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 11,607 — 1958 දෙසැම්බර් 3 වැනි බදාදා — 3.12.1958

11,607 ம் இலக்கம் — 1958 ம் ஆண்டு மார்கழி மாதம் 3 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவின் 7 ம் உபபிரிவினால் மேற்காணும் அட்டவணையிலுள்ள கட்டளைகள் என்னால் அங்கீகரிக்கப்பட்டவையென இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

கொழும்பு,
1958 ம் ஆண்டு டிசெம்பர் மீ 1 ந் வ.

டீ. பீ. ஆர். குணவர்தன,
விவசாய உணவு அமைச்சர்.

| கட்டளையிடப்பட்ட திகதி | யாரால் கட்டளை இடுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டது | கட்டளை எப்பொருளுக்குச் சேர்மதியானது | எவ்வர்த்தமானப் பத்திரிகையில் கட்டளை பிரசுரம் செய்யப்பட்டது |
|---|---|---|---|
| 15.9.58 | இரத்தினபுரி மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) | உப உணவுப் பொருட்கள் | 17.9.58 ம் திகதியைக் கொண்ட 11,526 ம் இலக்கம் |
| 13.9.58 | குருநாக்கல் மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) | ஷை | 17.9.58 ம் திகதியைக் கொண்ட 11,526 ம் இலக்கம் |
| 13.9.58 | களுத்துறை மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) | ஷை | 17.9.58 ம் திகதியைக்கொண்ட 11,526 ம் இலக்கம் |
| 10.9.58 | யாழ்ப்பாண மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) | ஷை | 15.9.58 ம் திகதியைக்கொண்ட 11,525 ம் இலக்கம் |
| 12.9.58 | மாத்தளை மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) | ஷை | 17.9.58 ம் திகதியைக்கொண்ட 11,526 ம் இலக்கம் |
| 15.9.58 | கேகாலை மாவட்ட உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு) | ஷை | 17.9.58 ம் திகதியைக்கொண்ட 11,526 ம் இலக்கம் |
| 13.9.58 | அனுராதபுர மாவட்ட உப விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு) | ஷை | 17.9.58 ம் திகதியைக்கொண்ட 11,526 ம் இலக்கம் |
| 13.9.58 | மாத்தறை மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) | ஷை | 17.9.58 ம் திகதியைக்கொண்ட 11,526 ம் இலக்கம் |
| 12.9.58 | புத்தளம் சிலாபம் மாவட்ட உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு) | ஷை | 15.9.58 ம் திகதியைக்கொண்ட 11,525 ம் இலக்கம் |
| 16.9.58 | காலி மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) | ஷை | 22.9.58 ம் திகதியைக்கொண்ட 11,529 ம் இலக்கம் |
| 17.9.58 | திருகோணமலை மாவட்ட உப விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) | ஷை | 22.9.58 ம் திகதியைக்கொண்ட 11,529 ம் இலக்கம் |
| 10.9.58 | நுவரெலியா மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) | ஷை | 15.9.58 ம் திகதியைக்கொண்ட 11,525 ம் இலக்கம் |
| 13.9.58 | மன்னார் மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) | ஷை | 15.9.58 ம் திகதியைக்கொண்ட 11,525 ம் இலக்கம் |
| 17.9.58 | அம்பான்தோட்டை மாவட்ட உப விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) | ஷை | 22.9.58 ம் திகதியைக்கொண்ட 11,529 ம் இலக்கம் |
| 19.9.58 | பதுளை மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) | ஷை | 24.9.58 ம் திகதியைக்கொண்ட 11,530 ம் இலக்கம் |
| 22.9.58 | கொழும்பு மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) | ஷை | 22.9.58 ம் திகதியைக் கொண்ட 11,529 ம் இலக்கம் |
| 22.9.58 | வவுனியா மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) | ஷை | 24.9.58 ம் திகதியைக்கொண்ட 11,530 ம் இலக்கம் |
| 24.9.58 | மட்டக்களப்பு மாவட்ட உப விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) | ஷை | 30.9.58 ம் திகதியைக்கொண்ட 11,542 ம் இலக்கம் |
| 29.9.58 | நுவரெலியா மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி | ஷை | 2.10.58 ம் திகதியைக்கொண்ட 11,543 ம் இலக்கம் |
| 14.7.58 | களுத்துறை மாவட்ட உதவி விலைக்கப்பட்டுப்பாட்டதிகாரி (உணவு) | ஆட்டிறைச்சி | 17.7.58 ம் திகதியைக்கொண்ட 11,427 ம் இலக்கம் |
| 11.7.58 | மாத்தளை மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) | ஷை | 17.7.58 ம் திகதியைக்கொண்ட 11,427 ம் இலக்கம் |

# விலைக் கட்டளைகள்

உணவு விலைக் கட்டளை இலக்கம் : கே. எல். 52. உப உணவுப் பொருட்கள் (செத்தல் மிளகாய்).

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவோடு 3 (2) ம் உட்பிரிவினால் என்மேற் பாரிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, களுத்துறை மாவட்ட உதவி (உணவு), விலைக் கட்டுப்பாட்டதிகாரி, வில்பிரெட் பிரான்சிஸ் பேர்டினந்து ஆகிய யான் இக்கட்டளையால்—

(i) 1958 ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 23 ந் திகதியைக்கொண்ட 11,480 ம் இலக்க இலங்கை அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில், 1958 ம் ஆண்டு ஒகஸ்ற் மாதம் 19 ந் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட கே. எல். 47 இலக்கமுள்ள எனது உணவு விலைக் கட்டளையில், மொத்த வியாபாரியின் ஆகக்கூடிய மொத்த விலை, சில்லறை வியாபாரியின் ஆகக்கூடிய சில்லறை விலை முதலியவற்றைப் பொறுத்தமட்டில் குறித்த அட்டவணையின் முறையே, 2ம், 3 ம் பத்திகளில் காணப்படும் விலைகளையும், 1 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள செத்தல் மிளகாய் பற்றிய எனது விலைக்கட்டளையையும் இத்திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன் ;

(ii) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம் பத்திகளில் விவரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே மொத்த அந்தர் ஒன்றின் மொத்த வியாபாரியின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலையாகவும், நிகர இருத்தல் ஒன்றின் சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன் ; குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் நேரொத்த பதிவில் விபரிக்கப்பட்டுள்ள பொருளை இந்த விலைகளுக்குக் கூடுதலாக களுத்துறை மாவட்ட எல்லைக்குள் விற்றலாகாது ;

(iii) 1958 ம் ஆண்டு ஒகஸ்ற் மாதம் 23 ந் திகதியைக் கொண்ட 11,480 ம் இலக்க இலங்கை அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில், 1958 ம் ஆண்டு ஒகஸ்ற் மாதம் 19 ந் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட, உப உணவுப் பொருட்கள் சம்பந்தப்பட்ட கே. எல். 47 ம் இலக்க உணவு விலைக் கட்டளையின் (iii) தொடக்கம் (viii) ம் வரையுள்ள பந்திகள், இதனோடிருக்கும் அட்டவணையின் 1 ம் பத்தியில் குறிக்கப்பட்டுள்ள செத்தல் மிளகாயைப் பொறுத்த இக்கட்டளையுடன் சேர்க்கப்பட்டுருப்பதாகக் கருதப்படவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1958 ம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ந் திகதி, முற்பகல் 10 மணிக்கு களுத்துறையில் கைச்சாத்திடப்பட்டது.

டபிள்யு. எப். பேர்டினந்து,
களுத்துறை மாவட்ட உதவி (உணவு) விலைக்கட்டுப்பாட்டதிகாரி.

### அட்டவணை

| பத்தி 1<br>விபரம் | பத்தி 2<br>மொத்த வியாபாரி மொத்த அந்தர் ஒன்றைச் சில்லறை வியாபாரிக்கு விற்கும் ஆகக்கூடிய மொத்த விலை<br>ரூ. ச. | பத்தி 3<br>சில்லறை வியாபாரி நிகர இருத்தல் ஒன்றை விற்கும் ஆகக் கூடிய சில்லறை விலை<br>ரூ. ச. |
|---|---|---|
| செத்தல் மிளகாய் .. .. | 88 94 .. | 0 88 |

**குறிப்பு**.—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருளை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருளை விற்றலாகாது.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.